# பத்தாம் வகுப்பு அரையாண்டுத் தேர்வு – 2022
## தமிழ் விடைக்குறிப்பு

| I | அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 15X1=15 |
|---|---|---|
| 1. | அ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் | 1 |
| 2. | ஈ) சருகும், சண்டும் | 1 |
| 3. | ஈ) இலா | 1 |
| 4. | இ) அறியா வினா, சுட்டு விடை | 1 |
| 5. | ஆ) தளரப் பிணைத்தால் | 1 |
| 6. | இ) உருவகம் | 1 |
| 7. | இ) இடையறாது அறப்பணி செய்தலை | 1 |
| 8. | ஆ) பெற்ற சுதந்திரத்தை பேணிக்காத்தல் | 1 |
| 9. | ஆ) பறை | 1 |
| 10. | ஈ) மன்னன், இறைவன் | 1 |
| 11. | இ) அன்மொழித்தொகை | 1 |
| | **பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்க விடையளிக்க** | |
| 12. | ஆ) இளங்கோவடிகள் | 1 |
| 13. | இ) சிலப்பதிகாரம் | 1 |
| 14. | அ) எண்ணும்மை | 1 |
| 15. | ஆ) மணம் | 1 |

**குறுவினா – பிரிவு – 1 – (மதிப்பெண்கள்- 18)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4X2=8**

**வினா எண் 21ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும் எ**

| | | |
|---|---|---|
| 16. | **விடைக்கேற்ற வினா அமைக்க**<br>அ) எந்நாளை உலகக் காற்று நாளாக கொண்டாடுகிறோம்?<br>ஆ) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலை எது?<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | <br>1<br>1 |
| 17. | **வசன கவிதை**<br>❖ உரைநடையும் கவிதையும் இணைந்து **யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு** உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.<br>❖ ஆங்கிலத்தில் Prose Poetry ( free verse ) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. | <br>1<br><br>1 |
| 18. | **சிரித்து பேசினர்:**<br>❖ சிரித்து சிரித்து பேசினர்.<br>❖ உவகை காரணமாக அடுக்குத்தொடரானது. | <br>1<br>1 |
| 19. | **மெய்க்கீர்த்தி**<br>❖ அரசர்கள் தங்களின் வரலாறும் பெருமையும் காலம் கடந்து கடந்தும் அழியாமல் பாதுகாக்கவே ஆகும். | <br>2 |
| 20. | **அமர்ந்தான்**<br>❖ அமர் +த்(ந்) +த் +ஆன்<br>❖ அமர் - பகுதி, த் - சந்தி; த்(ந்) - ந் ஆனது விகாரம் ;<br>த் - இறந்தகால இடைநிலை; ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | <br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 21. | **திருக்குறள்**<br>முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை<br>இன்மை புகுத்தி விடும். | 2 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி 4X2=8** | |
| 22. | வழுவை வழாநிலையாக மற்றுக<br>❖ அண்ணன் நேற்று வீட்டிற்கு **வந்தான்.**<br>❖ அண்ணன் புறப்படும்போது அம்மா **வழியனுப்பினார்.** | <br>1<br>1 |
| 23. | **பொருத்தமானவற்றை சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**<br>அ) தோற்பவை, தோற்பாவை<br>ஆ) விருது, விருந்து | <br>1<br>1 |
| 24. | இருசொற்களைப் பயன்படுத்தி தொடர் அமைக்க<br>நேற்று **மாலை மலைக்**கோவிலுக்குச் சென்றேன்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 2 |
| 25. | **கலைச்சொல்**<br>அ) **Modern Literature** - நவீன இலக்கியம்<br>ஆ) **Consonant** - மெய்யெழுத்து<br>**(செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா)**<br>கற்குவியல், ஆட்டுமந்தை | <br>1<br>1<br><br>1+1 |
| 26. | **பொருத்தமான தொடர் அமைக்க**<br>திருடன் காவலரிடம் **முன்னுக்குப்பின்** முரணாக பதிலளித்தான்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 2 |
| 27. | **நிறுத்தற்குறி இடுக.**<br>பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூற, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்க அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி | 1<br>1 |
| 28. | தமிழெண்களை எழுதுக.<br>அ) எட்டு – அ<br>ஆ) நான்கு, இரண்டு – ச, உ | <br>1<br>1 |
| | **பிரிவு – 1**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2X3=6** | |
| 29. | **இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்கள்**<br>❖ வயலில் **நெல் நாற்று** நட்டார்கள்<br>❖ **தென்னம்பிள்ளை** வாங்கி வந்தேன்.<br>❖ காட்டில் **பனைவடலியைப்** பார்த்தேன்.<br>❖ **சோளப்பைங்கூழ்** பார்ப்பதற்க அழகாக உள்ளது.<br>❖ தோட்டத்தில் **வாழைக்கன்று** நட்டேன்.<br>**(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | <br>1<br>1<br>1 |
| 30. | **தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்**<br>❖ **இடம்** : மாநகராட்சிக் கூட்டத்தில் மாநகரத் தந்தை செங்கல்வராயன் முன்னிலையில் ம.பொ.சிவஞானம் கூறியது.<br>❖ **பொருள்** : தலையைக் கொடுத்தேனும் தலைநகரத்தைக் காப்போம்.<br>❖ **விளக்கம்** : ஆந்திர மாநிலம் பிரியும் போது அதோடு இருந்த சென்னையைத் தமிழகத்திற்காக மீட்க வேண்டும் என்று போராடிய போது மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்று மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூடியது. அதில் பங்கெடுத்த மா.பொ.சி. அவர்கள் சென்னையைப் பற்றிய தீர்மானத்தை முன் மொழிந்த போது ‘தலையைக் | 1<br><br>1/2<br><br>1<br>1/2 |

| | | |
|---|---|---|
| | கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று முழங்கி தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார். | |
| 31. | **பத்தியைப் படித்து விடையளிக்க**<br>அ) அறம் கூறும் மன்றங்கள்<br>ஆ) அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்<br>இ) மதுரைக்காஞ்சி | <br>1<br>1<br>1 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** | **2X3=6** |
| 32. | **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன:**<br>❖ அழகு நிறைந்த **செழுந்தமிழ்.**<br>❖ **பழமைக்கு பழமையாய்** தோன்றிய நறுங்கனி.<br>❖ கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் **நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு.**<br>❖ **பாண்டிய மன்னனின் மகள்.**<br>❖ **திருக்குறளின்** பெரும் பெருமைக்குரியவள்.<br>❖ பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, நிலைத்த சிலப்பதிகாரம், அழகான மணிமேகலை போன்ற இலக்கியங்களை உடையவள்.<br>எனவே தமிழன்னையை தலைபணிந்து வாழ்த்துவதாக பாவலரேறு கூறுகிறார். | 1<br>1<br>1 |
| 33. | **முன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்யக் காரணம் :**<br>❖ கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட, அதைப் பொருட்பாடுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான்.<br>❖ மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார்.<br>❖ மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிரு ஆலவாயில் சென்று தங்கினார்.<br>❖ இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்பச் செய்தார். | 1<br>1<br>1 |
| 34. | **நீதி வெண்பா**<br>**- கா.ப. செய்குதம்பிப் பாவலர்**<br>அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி<br>மருளை அகற்றி மதிக்கும் தெருளை<br>அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்<br>பொருத்துவதும் கல்வியென்றே போற்று. | 3 |
| | **அல்லது** | |
| | **கம்பராமாயணம்**<br>**- கம்பர்**<br>வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்<br>பொய்யோவெனு மிடையாளொடும் மிளையாளொடும் போனான்<br>மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ<br>ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். | 3 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** | **2X3=6** |
| 35. | **தற்குறிப்பேற்ற அணி**<br>**அணிவிளக்கம் :** இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும். | 1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | **எடுத்துக்காட்டு :**<br>'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி<br>'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'<br>**அணிப்பொருத்தம்:**<br>❖ கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன.<br>❖ ஆனால் இளங்கோவடிகள், கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக்கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார்.<br>❖ இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும். | 1/2<br><br><br><br>1<br>1/2 |
| 36. | **ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்**<br>**ஓசை** : அகவல் ஓசை<br>**சீர்** : ஈரசைச்சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்<br>**தளை** : ஆசிரியத்தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.<br>**அடி** : மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.<br>**முடிப்பு** : ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு | <br><br><br>2<br><br>1 |
| 37. | அலகிட்டு வாய்பாடு<br>பொறி/யின் /மை — நிரை நேர் நேர் — புளிமாங்காய்<br>யார்க் /கும் — நேர் நேர் — தேமா<br>பழி/அன் — நிரை நேர் — புளிமா<br>றறி/வறிந் — நிரை நிரை — தோமாங்காய்<br>தாள் /வினை — நேர் நிரை — கூவிளம்<br>இன் /மை — நேர் நேர் — தேமா<br>பழி — நிரை — மலர்<br>**இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.** | <br><br>2<br><br><br><br><br><br>1/2 |
| **IV** | **அனைத்து வினாக்களுக்கும் விடையளி** | **5X2=25** |
| 38.<br>அ) | **முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகள்**<br>**கார்காலம் :**<br>➢ அகன்ற உலகத்தை வளைத்து பெருமழை பொழிகிறது.<br>➢ மழைமேகமானது மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நின்றது.<br>➢ மலையைச் சூழ்ந்து விரைந்த வேகத்துடன் பெருமழையாகப் பொழிகிறது.<br>**மாலைப்பொழுது :**<br>➢ நறுமணம் கொண்ட முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின்முன் தூவி, தெய்வத்தைத் தொழுது நின்றனர்<br>**புல் அறுக்கும் இடையர் :**<br>➢ இடைமகள் குளிர் தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்று, "புல்லை மேய்ந்த பின் உன் தாய்மார், வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்து விடுவர் , வருந்தாதே" என்றாள். | <br><br>1<br><br><br><br><br>1<br><br><br>1 |

| | | |
|---|---|---|
| | **ஆற்றுப்படுத்துதல் :**<br>➢ நின் தலைவன் பகைவரை வென்று திறைப்பொருளோடு வருவது உறுதி. தலைவியே! மனத்தடுமாற்றம் கொள்ளாதே என ஆற்றுப்படுத்தினர் முதுபெண்டிர். | 2 |
| ஆ) | **இறைவன், இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வு:**<br>➢ இடைக்காடனார், இனிய தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.<br>➢ இடைக்காடனார், இறைவனிடம் "குலேசபாண்டியன் சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.<br>➢ இடைக்காடனார், இறைவனிடம் " பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார்.<br>➢ இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார் இறைவன். ஆதலால் கடம்பவனக் கோவிலை விட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று இருந்தார்.<br>➢ "இறைவனே, என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்ஒழுக்கத்தில் குறைன்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று வேண்டினான் பாண்டிய மன்னன்.<br>➢ இடைக்காடார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம் என்றார்.<br>➢ உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று குற்றத்தைப் பொறுக்க வேண்டி போற்றினான்.<br>➢ முன்னனது மாளிகை அன்றலர்ந்த மலர்கள், பூரண கும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டு, ஒளியுடைய மணிகள் பதிக்கப்பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலன்களாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான் மன்னன்.<br>➢ பாண்டியன், "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்கடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான். நுண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், "மன்னா, நீ கூறிய அமுதம்போனற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்றனர்.<br><br>**( பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக )** | 5 |
| 39. | **அ) தோழனை வாழ்த்தி மடல்** | 5 |

| | | |
|---|---|---|
| அ) | ➢ இடம், நாள் (வலப்புறம்)<br>➢ விளித்தொடர்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ உறைமேல் முகவரி | |
| ஆ) | **மின்வாரிய அலுவலருக்கு கடிதம்**<br>➢ அனுப்புநர்<br>➢ பெறுநர்<br>➢ விளித்தொடர்<br>➢ பொருள்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ இடம்<br>➢ நாள்<br>➢ உறைமேல் முகவரி | 5 |
| 40.<br>அ) | **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**<br>(பொருத்தமான தலைப்பு எழுதி, கவிதை வடிவில் எட்டு வரிகளுக்கு குறைவில்லாமல் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) | 5 |
| | **அல்லது** | |
| ஆ) | **மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவம்**<br>உரிய விபரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு முழு மதிப்பெண் வழங்குக. | 5 |
| 41. | **நயம் பாராட்டுக.**<br>❖ முன்னுரை<br>❖ திரண்ட கருத்து<br>❖ மையக்கருத்து<br>❖ மோனை<br>❖ எதுகை<br>❖ இயைபு<br>❖ ஓசை<br>❖ சந்தம்<br>❖ அணி<br>❖ சொல்<br>❖ பொருள்<br>❖ முடிவுரை<br>**ஏற்புடைய நயங்கள் ஏதேனும் ஐந்து எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.** | 5 |
| 42.<br>அ) | **<u>மொழிபெயர்ப்பு</u>**<br>➢ தங்கக் கதிர்களைக் கொண்ட கதிரவன் காலையில் உதிக்கின்றது.<br>➢ தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது. வேண்ணிற மேகமானது அங்குமிங்கும் நகர்கிறது.<br>➢ வண்ண நிறமான பறவைகள் காலையில் தன் இசைகீதத்தை இசைக்கிறது.<br>➢ சுறுசுறுப்பான வண்ணத்துப் பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன.<br>➢ மலர்களின் நறுமணம் காற்றை எங்கும் வீசி இதமான சூழலைத் தருகிறது. | 5 |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா | | |
| | 1) மீண்டும் மீண்டும்<br>2) தொடர்ந்து மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.<br>3) பெய்மழை<br>4)<br>5) நீர், வெப்பம், காற்று, மழை, வானம் | 5 | |
| ஆ) | நடைமுறை உலகில் செயல்படவைக்க செய்யும் முயற்சி:<br>1) நல்ல புத்தகங்களை வாசிக்கக் கொடுப்பேன்.<br>2) வீட்டுத்தோட்டம் உருவாக்க வழி செய்வேன்.<br>3) உடற்பயிற்சி செய்ய ஊக்கவிப்பேன்.<br>4) ஆன்மீகத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வைப்பேன்.<br>5) ஒன்றாக இணைந்து சிறு சிறு விளையாட்டுகள் விளையாடுதல்.<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) | | |
| IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 3X8=24 | |
| 43. அ) | தமிழரின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கதிற்கான தேவை குறித்தும், தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு<br>➢ தமிழின் சிறப்புகள்<br>➢ தமிழ்ச்சொல்வளம்<br>➢ புதிய சொல்லாக்கத்திற்கான தேவை<br>( பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக ) | 8 | |
| | அல்லது | | |
| ஆ) | <u>நாளிதழுக்கான தலையங்கம் :</u><br><u>நிகழ்கலை வடிவங்கள்:</u><br>சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.<br><u>நிகழ்கலை வடிவங்கள் :</u><br>கரகாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம்,<br>தப்பு ஆட்டம், புலி ஆட்டம், தெருக்கூத்து, தோற்பாவைக்கூத்து<br><u>ஒப்பனைகள் :</u><br>நிகழ்கலைகள் பல்வேறு வடிவங்களைக் கொண்டவை. ஒவ்வொரு கலையுமே ஒவ்வோர் ஒப்பனைகளைக் கொண்டது.<br><u>சிறப்பும் பழமையும் :</u><br>நிகழ்கலைகள் ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றன.<br>இவை கற்றோராலும் மற்றோராலும் விரும்பப்படும்.<br>உழைப்பாளிகளின் உணர்வுகளாக உள்ளன.<br><u>அழிவதற்கான காரணங்கள் :</u><br>கலை ஆர்வமின்மை, நகர்புறப் புலம்பெயர்தல்<br><u>செய்ய வேண்டியது :</u><br>நிகழ்கலை நமது முன்னோர் வளர்த்த கலை என்ற உணர்வு வேண்டும்.<br>நமது ஊரில் நடக்கும் பொது நிகழ்வுகளில், திருவிழாக்களில் நிகழ்கலைஞர்களை அழைத்து வந்து அக்கலைகளை வளர்க்க வேண்டும்.<br>( பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக ) | 8 | |

| | | |
|---|---|---|
| 44. அ) | **அன்னமய்யா**<br>➢ அன்னமய்யா<br>➢ உபசரித்தல்<br>➢ தாயின் உள்ளம்<br>➢ பெயர்ப்பொருத்தம்<br>**(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | 8 |
| | **அல்லது** | |
| ஆ) | **புதிய நம்பிக்கை**<br>➢ கறுப்பினக் குடும்பம்<br>➢ வெள்ளைக் குழந்தைகளுடன் விளையாட்டு<br>➢ பறிக்கப்பட்ட புத்தகம்<br>➢ புதிய நம்பிக்கை<br>➢ மேரியும் கல்வியும்<br>➢ முதல் பட்டம்<br>➢ மேற்கல்வி<br>**(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | 8 |
| 45. அ) | **அரசுப் பொருட்காட்சி**<br>➢ முன்னுரை<br>➢ நுழைவுச்சீட்டு<br>➢ பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள்<br>➢ அங்காடிகள்<br>➢ பிற பொழுதுபோக்கு அம்சங்கள்<br>➢ முடிவுரை | 8 |
| | **அல்லது** | |
| ஆ) | **சாலைப் பாதுகாப்பு**<br>➢ முன்னுரை<br>➢ சாலைப்பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு<br>➢ சாலைவிதிகள்<br>➢ ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்<br>➢ விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்<br>➢ முடிவுரை<br>**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)** | 8 |

**சுந்தரராஜன் மா**
**B.Lit., M.A., B.Ed., D.T.Ed**
9566585860
ஸ்ரீராம் வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,
பொட்டனேரி, சேலம் - 636453.

www.Padasalai.Net